**ஆசிரியர் தேர்வு வாரியம், தமிழ்நாடு**

**முதுகலை ஆசிரியர் / உடற்கல்வி இயக்குநர் தரம்-1 / கணினி பயிற்றுநர் தரம்-1 ஆகிய பணிகளுக்கான நேரடி நியமனம்.**

**இணைய வழியில் "விண்ணப்பிக்கும் முறை" சார்ந்து பணிநாடுநர்களுக்கான வழிமுறைகள் மற்றும் பிற அறிவுரைகள்**

இப்பணிகளுக்காக விண்ணப்பம் செய்வோர் தற்போது செயல்பாட்டில் உள்ள தங்களின் மின்னஞ்சல் முகவரி (Email ID) மற்றும் கைப்பேசி எண்ணைப் பயன்படுத்தலாம். அவ்வாறு மின்னஞ்சல் முகவரி மற்றும் கைப்பேசி எண் இல்லாதவர்கள் புதியதாக மின்னஞ்சல் முகவரி ஒன்றினை உருவாக்கிக் கொள்வதோடு ஒரு கைப்பேசி எண்ணையும் வைத்துக் கொள்ளவேண்டும்.

**முக்கியக் குறிப்பு 1:** பணிநாடுநர்கள் சிவப்பு உடுக்குறி (*) இடப்பட்ட கட்டாயப் புலங்களைத் தவறாமல் நிரப்பவேண்டும்.

**முக்கியக் குறிப்பு 2:** இவ்வழிமுறைகளைத் தமிழில் பதிவிறக்கம் செய்யவிரும்பும் பணிநாடுநர்கள் "**Click Here to download Instructions in Tamil**" என்பதைச் சொடுக்கவும்.

**புதிய பயனாளர்:**

i. பணிநாடுநர்கள் புதிய பயனாளர் எனில், பதவிப் பட்டியலில் விண்ணப்பிக்க விரும்பும் முதுகலை ஆசிரியர் அல்லது உடற்கல்வி இயக்குநர் தரம்-1 அல்லது கணினி பயிற்றுநர் தரம்-1 என்னும் ஒன்றினைத் தேர்வு செய்து கொண்டு, தம் விவரங்களைப் பதிவு செய்யவேண்டும். பணிநாடுநர் தம்முடைய கைப்பேசி எண்ணை ஒருமுறைக் கடவுச் சொல் (OTP) வாயிலாகச் சரிபார்த்துக் கொள்ளவேண்டும். மேலும் மின்னஞ்சல் முகவரியை இருமுறை பதிவிட்டு அதனைச் சரியாகப் பதிவிட்டுள்ளதை உறுதி செய்யவேண்டும்.

ii. கட்டாயப் புலங்களைப் பதிவிட்ட பின்னர், பணிநாடுநர்கள் 'புதிய பயனாளர் பதிவிடும்' பகுதியில் உள்ள "**சமர்ப்பிக்க**" என்னும் பொத்தானைச் சொடுக்கவும்.

iii. சமர்ப்பித்தலை வெற்றிகரமாக முடித்த பின்னர், பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் உருவாக்கப்பட்டுத் திரையில் தோன்றுவதோடு, அவை

பயனாளரின் மின்னஞ்சல் மற்றும் கைப்பேசி எண்ணுக்கும் அனுப்பிவைக்கப்படும். பயனாளர் தம் பயனாளர் குறியீடு மற்றும் கடவுச் சொல்லை நுழைவுப் பக்கத்தில் பதிவிட்டு நுழைவுப் பொத்தானைச் சொடுக்கி நுழைவினை நிறைவு செய்யவேண்டும். முதல் நுழைவு வெற்றிகரமாக நடந்த பின்னர் பயனாளர் தம் கடவுச் சொல்லை மாற்றிக்கொள்ளவேண்டும்.

iv. அதன் பின்னர், வழிமுறைகள் சார்ந்த பக்கம் ஒன்று தோன்றும். அவ்வழிமுறைகளை முழுமையாகப் படித்த பின்னர், பயனாளர் "**உறுதிமொழி**" வழங்கத் திரையில் தோன்றும் உரிய குறிப்பெட்டியைத் தேர்வு செய்யவேண்டும். அதன் பின்னர் தொடர்ந்து செல்ல "**தொடர்க**" என்னும் பொத்தானைச் சொடுக்கவேண்டும்.

v. இப்பொழுது பயனாளர் விண்ணப்பிக்க விழையும் முதுகலை ஆசிரியர் அல்லது உடற்கல்வி இயக்குநர் தரம்-1 அல்லது கணினி பயிற்றுநர் தரம்-1 சார்ந்த விண்ணப்பப் படிவம் திரையில் தோன்றும்.

**விண்ணப்பப்படிவத்தில் கீழ்க்காணும் பகுதிகள் காணப்படும்**

1. தன் விவரங்கள்
2. கல்வித் தகுதி
3. புகைப்படம் பதிவேற்றம்
4. கையொப்பம் பதிவேற்றம்
5. முன்னோட்டம்
6. கட்டணம் செலுத்தும் பகுதி
7. விண்ணப்பப்படிவம் பதிவிறக்கம்
8. சான்றிதழ் பதிவேற்றம்
9. தேர்வுகள்
10. தேர்வு வுமய விவரங்கள்
11. பணிநாடுநரின் முறையீடுகள்
12. பொது குறிப்பு
13. தேர்வினை இரத்து செய்தல்

1. தன் விவரங்கள்

i. தன் விவரப் பக்கத்தில், பணிநாடுநர் தனது பிறப்பிடம், பாலினம் ஆகியவற்றை நிரப்பவேண்டும். பாலினத்தைத் தேர்வு செய்தவுடன், உறுதிசெய்வதற்கான பெட்டி தோன்றும். அதில் பணிநாடுநரின் பாலினத்தை உறுதி செய்யும் வகையில் சரி என்பதைச் சொடுக்க வேண்டும். பணிநாடுநரின் நிரந்தர முகவரி மற்றும் தொடர்புக்கான முகவரி ஆகியவற்றை உரிய பகுதிகளில் பதிவிடவேண்டும்.

ii. பணிநாடுநர் “தமிழ்நாடு அரசு வழங்கிய சாதிச் சான்று உங்களிடம் உள்ளதா?” என்ற வினாவிற்கு எதிரேயுள்ள **“சரி”** என்பதைச் சொடுக்கினால், இழுவைப் பட்டியலில் சாதிகளின் பெயர்ப் பட்டியல் தோன்றும். பணிநாடுநர் அவற்றுள் தனக்கான சாதியைத் தேர்வு செய்து கொள்ள வேண்டும்.

iii. தமிழ்நாடு அரசு வழங்கிய சாதிச் சான்று உங்களிடம் உள்ளதா?” என்பதற்கு எதிராக “இல்லை” என்பதைச் சொடுக்கினால், பிற இனத்தவர் என்று தானாகவே தேர்வாகிவிடும்.

iv. பணிநாடுநர் தம்முடைய தேசிய இனம் மற்றும் சமயம் ஆகியவற்றை நிரப்பவேண்டும் மற்றும் ஜாதி சான்றிதழை பதிவேற்றம் செய்யவேண்டும்.

v. தன் விவரப் பக்கத்தில் அனைத்துக் கட்டாயப் பகுதிகளும் நிரப்பப்பட்ட பின்னர் **“சேமிக்க & தொடர்க”** என்ற பொத்தானைச் சொடுக்கிய பின்னர், **“கல்வித் தகுதி”** என்ற பகுதியைப் பூர்த்தி செய்யவேண்டும்.

2. கல்வித் தகுதி

i. இப்பகுதியில் கொடுக்கப்பட்ட அட்டவணையில் பணிநாடுநர் தம்முடைய கல்வித் தகுதி குறித்த விவரங்கள், தமிழ் வழிக் கல்வி பயின்றதற்கான விவரங்கள் மற்றும் விண்ணப்பிக்கும் பணிக்கு ஏற்ற தகுதி வகைப்பாடு ஆகியவற்றைப் பதிவிடவேண்டும்.

ii. அதன் பின்னர் **“சேமிக்க & தொடர்க”** என்ற பொத்தானைச் சொடுக்கிய பின்னர், **“புகைப்படம் பதிவேற்றம்”** என்ற பகுதி திரையில் தோன்றும்.

iii. கல்வித்தகுதிகளுக்கான உரிய அனைத்து சான்றிதழ்களும் பதிவேற்றம் செய்யப்படவேண்டும்.

3. புகைப்படம் பதிவேற்றம்

i. இங்குப் பணிநாடுநரின் பயனாளர் குறியீடு, பெயர், பாலினம் மற்றும் பிறந்த நாள் ஆகியவை தாமாகவே திரையில் தோன்றும்.

ii. பணிநாடுநர் அண்மையில் எடுக்கப்பட்ட தன்னுடைய பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தின் வருடிய உருவைப் பதிவேற்றம் செய்யவேண்டும். (ஏற்கத்தக்க அளவு 20kb முதல் 60kb வரை; அனுமதிக்கப்படும் வடிவமைப்பு JPG, JPEG, BMP அல்லது PNG).

iii. அதன் பின்னர் **“கோப்பைத் தேர்ந்தெடு”** என்ற பொத்தானைச் சொடுக்கிப் புகைப்படத்தைப் பதிவேற்றம் செய்யவேண்டும்.

iv. புகைப்படத்தைப் பதிவேற்றம் செய்த பின்னர், பணிநாடுநர் **“தொடர்க”** என்ற பொத்தானைச் சொடுக்க வேண்டும். பின்னர் **“கையொப்பம் பதிவேற்றம்”** என்னும் பகுதி தோன்றும்.

4. கையொப்பம் பதிவேற்றம்

i. இங்குப் பணிநாடுநரின் பயனாளர் குறியீடு, பெயர், பாலினம் மற்றும் பிறந்த நாள் ஆகியவை தாமாகவே திரையில் தோன்றும்.

ii. பணிநாடுநர் தன்னுடைய கையெழுத்தின் வருடிய உருவைப் பதிவேற்றம் செய்யவேண்டும் (ஏற்கத்தக்க அளவு 10kb முதல் 30kb வரை; அனுமதிக்கப்படும் வடிவமைப்பு JPG, JPEG, BMP அல்லது PNG).

iii. அதன் பின்னர் **“கோப்பைத் தேர்ந்தெடு”** என்ற பொத்தானைச் சொடுக்கிக் கையெழுத்தைப் பதிவேற்றம் செய்யவேண்டும்.

iv. கையெழுத்தைப் பதிவேற்றம் செய்த பின்னர், பணிநாடுநர் **“தொடர்க”** என்ற பொத்தானைச் சொடுக்க வேண்டும். அனைத்துப் பதிவுகளையும் முடித்துக் கொண்ட பின்னர், **“முன்னோட்டம்”** பகுதி தோன்றும்.

5. முன்னோட்டம்

i. இப்பகுதியில். விண்ணப்பப்படிவத்தில் நிரப்பிய அனைத்து விவரங்களும், ஒவ்வொரு பிரிவிலும் **“திருத்துக”** என்ற விருப்புரிமையுடன் ஒரே பக்கத்தில்

காட்சிப்படுத்தப்படும். குறிப்பிட்ட பகுதியில் திருத்தம் செய்யப் பணிநாடுநர் விரும்பினால் அப்பகுதியின் **"திருத்துக"** என்ற இணைப்பைச் சொடுக்கித் தேவையான மாற்றம் அல்லது திருத்தத்தை மேற்கொள்ளலாம்.

ii. இப்பொழுது ஒரே பக்கத்தில் விண்ணப்பப்படிவமும், அதன் இறுதியில் **"சமர்ப்பிக்கத் தயாராகுக"** என்ற பொத்தானும் தோன்றும்.

iii. "விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்க" என்ற பொத்தானைச் சொடுக்கியவுடன், "**உறுதிமொழி**" என்ற குறுந்தகவல் பெட்டி திறக்கும். சரிக்குறிப் பெட்டியைச் செயல் படுத்திய பின்னர், விண்ணப்பப்படிவத்தை நிறைவு செய்யும் விதமாக **"சமர்ப்பிக்க"** என்ற பொத்தானைச் சொடுக்கவும்.

iv. **"சமர்ப்பிக்க"** என்ற பொத்தானைச் சொடுக்கிய பின்னர், பணிநாடுநர் சமர்ப்பித்த விண்ணப்பப்படிவத்தில் உள்ள விவரங்களை **மாற்ற** முடியாது.

v. நிறைவாக, இப்பக்கம் கட்டணம் செலுத்தும் பக்கத்திற்குச் செல்லும்.

### 6. கட்டணம் செலுத்தும் பகுதி (கட்டணம் செலுத்தும்வழி – வாயிலாக)

i. பணிநாடுநர் விண்ணப்பித்த தேர்வு மற்றும் அதற்கான கட்டணம் ரூ. 500/250 என்ற தகவலுடன் திரையில் தோன்றும். **"கட்டணம் செலுத்தத் தயாராகுக"** என்ற பொத்தானை அழுத்தியவுடன், "கட்டணம் செலுத்தும்வழி" பக்கத்திற்குக் கணினி இட்டுச் செல்லும். அவ்வாறு சென்ற பக்கத்தில், பணிநாடுநர் கட்டணம் செலுத்தும் முறையைத் தேர்வு செய்யவேண்டும்.

ii. கட்டணம் செலுத்தும்வழிப் பக்கத்தில், கீழ்க்காணும் கட்டணம் செலுத்தும் முறைகள் காணப்படும்.

அ) வலைத்தள வங்கிச்சேவை, ஆ) கடன் அட்டை, இ) பற்று அட்டை

**பணிநாடுநர் (வலைத்தள வங்கிச்சேவை / கடன் அட்டை / பற்று அட்டை) முறையில் இணையத்தின் வாயிலாக மட்டுமே கட்டணத்தைச் செலுத்த அனுமதிக்கப்படுவார்.**

iii. ஏதேனும் காரணத்தால் கட்டணம் செலுத்தலில் பணப்பரிமாற்றம் நிகழாமல்போனால் பணிநாடுநர் மீண்டும் கட்டணத்தைச் செலுத்த முயலவேண்டும்.

iv. **பணம் திருப்பிக்கொடுத்தல் மற்றும் இரத்து செய்தல் கொள்கை**

எத்தகைய சூழலிலும் செலுத்தப்பட்ட கட்டணத்தைத் திரும்பப் பெறவோ அல்லது இரத்து செய்யவோ வேண்டுதல் விடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. எனினும், தொழில் நுட்பக் கோளாறு காரணமாக ஒரே விண்ணப்பப் படிவத்திற்காக இரண்டு முறை கட்டணம் செலுத்த நேரிடின், செலுத்தப்பட்ட கூடுதல் தொகை திருப்பிக் கொடுக்கப்படும்.

7. **விண்ணப்பப்படிவம் பதிவிறக்கம்**

நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவத்தைத் தரவிறக்கம் செய்ய விரும்பினால், பணிநாடுநரின் தகவல் முகப்பில் "**விண்ணப்பப் படிவம்**" என்ற இணைப்பைச் சொடுக்கவேண்டும்.

குறிப்பு :-

விண்ணப்பதாரர்கள் இணையவழி விண்ணப்பிக்கும்போதும், கணினி வழி தேர்வுகள் சார்ந்து ஏற்படும் சந்தேகங்களுக்கும், கணினி வழி தேர்வில் கேட்கப்படும் கேள்விகளுக்கான விடைகுறிப்பு சார்ந்த ஆட்சேபனைகள் மற்றும் ஆசிரியர் தேர்வு வாரிய விளம்பர எண் **01/2021** சார்ந்த அனைத்து சந்தேகங்களுக்கும் கீழ்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு எழுதுமாறு கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

| trbpgpgcipdgrievance@gmail.com |
|---|

பணி நாடுநர்கள் சந்தேகங்கள் சார்ந்து அனுப்பும் அஞ்சல், பதிவஞ்சல், நேரடியாக அளிக்கும் விண்ணப்பங்கள், புலனம் (Whattsapp) வழியாக அனுப்பும் விவரங்களை ஆசிரியர் தேர்வு வாரியம் ஏற்றுக்கொள்ளாது. சம்பந்தப்பட்ட மின்னஞ்சல் முகவரியில் மட்டுமே சந்தேகங்கள் மற்றும் ஆட்சேபனைகள் தெரிவிக்கப்படவேண்டும். அதில் வரும் ஆட்சேபனைகள், சந்தேகங்களுக்கு மட்டுமே ஆசிரியர் தேர்வு வாரியம் நடவடிக்கை மேற்கொள்ளும். மற்றவை நிராகரிக்கப்படும்.

**8. சான்றிதழ் பதிவேற்றம் சார்ந்து :-**

i) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தன்னுடைய சுய விவரங்கள், பிறந்த தேதி, ஜாதிச்சான்றிதழ், தமிழ்வழி முன்னுரிமை கோரும் சான்றிதழ் மற்றும் கல்வித்தகுதிக்கான சான்றிதழ்கள் அனைத்தையும் இணையவழியில் விண்ணப்பிக்கப்படும்போதே பதிவேற்றம்

செய்யப்படுதல் வேண்டும். அப்படி பதிவேற்றம் செய்யாமல் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களை ஆசிரியர் தேர்வு வாரியம் தேர்விற்கு அனுமதித்திருந்தாலும், சான்றிதழ் சரிபார்க்கும்போது இணைய வழியில் சான்றிதழ் பதிவேற்றம் செய்யாத பணி நாடுநர்கள் நிராகரிக்கப்படுவார்கள் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகின்றது.

ii) எந்தவொரு சான்றிதழை பதிவேற்றம் செய்யும்போதும் அச்சான்றிதழ் கணினி திரையில் தெளிவாக தெரியவேண்டும். அவ்வாறு தெளிவாக தெரியவில்லையென்றால் பணி நாடுநர்களின் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

iii) விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்யும்போது அந்தந்த சான்றிதழ்களுக்கான பகுதியில் மட்டுமே பதிவேற்றம் செய்யப்பட வேண்டும். மாற்றி பதிவேற்றம் செய்தால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். (குறிப்பாக பத்தாம் வகுப்பு சான்றிதழ் பதிவேற்றம் செய்யும் இடத்தில் ஜாதி சான்றிதழ் பதிவேற்றம் செய்யப்படுவது போன்று).

iv) பதிவேற்றம் செய்யப்படும் சான்றிதழ்கள் அனைத்துமே அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தேதிக்கு முன்னர் பெற்றிருக்க வேண்டும். பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளில் ஏற்படும் நிர்வாக காரணங்களால் தாமதமாக சான்றிதழ் பெறப்படுவதற்கு ஆசிரியர் தேர்வு வாரியம் எந்த வகையிலும் பொறுப்பேற்காது.

**9. தேர்வுகள் :-**

i) ஒவ்வொரு பணிநாடுநர்களும் தமிழகத்தில் எந்த ஒரு பகுதியிலும் கணினி வழி தேர்வினை எழுத தயாராக இருக்க வேண்டும். உடல் ஊனமுற்றோர், கர்ப்பிணி பெண்கள் மற்றும் கடுமையான நோய்களால் பாதிக்கப்பட்டோருக்கு மட்டுமே அதற்கான சான்றிதழ் சரிபார்த்தப்பின் அவர்களுக்கு அருகாமையில் உள்ள தேர்வு மையங்கள் ஒதுக்கப்படும்.

ii) ஒவ்வொரு பணி நாடுநர்களுக்கும் தேர்வுக்கு 7 நாட்களுக்கு முன்பாக எந்த மாவட்டத்தில் தேர்வு மையம் ஒதுக்கப்பட்டுள்ளது என்ற விவரமும் 3 நாட்களுக்கு முன்பாக தேர்வு மையத்தின் விவரமும் மினனஞ்சல் மூலமாக மட்டுமே அனுப்பப்படும்.

**10. தேர்வு மைய விவரங்கள் :-**

i) தேர்வு மைய விவரத்துடன் கூடிய அனுமதிச்சீட்டு பணிநாடுநர்களுக்கு இணையவழியில் மூலமாக மட்டுமே அனுப்பப்படும்.

ii) எக்காரணம் முன்னிட்டும் தேர்வு மையத்தை மாற்றும் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**11. பணி நாடுநரின் முறையீடுகள் :-**

i) பணிநாடுநரின் முதுகலை ஆசிரியர் தேர்வுகள் சார்ந்த எந்தவொரு சந்தேகங்களும், கணினி வழி தேர்வில் கேட்கப்படும் கேள்விகள் சார்ந்து விடைக்குறிப்பு ஆட்சேபணைகளும் அதற்கென உருவாக்கப்பட்ட மின்னஞ்சல் மூலமாக மட்டுமே ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு அனுப்பப்பட வேணடும். அஞ்சல், பதிவஞ்சல், நேரடியாக கொடுக்கப்படும் விண்ணப்பங்கள் மற்றும் புலனம் (Whattsapp) மூலமாக அனுப்பப்படும் எந்தவொரு கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**12. பொதுக்குறிப்பு :-**

i) ஒவ்வொரு பணிநாடுநரும் தான் விண்ணப்பிக்கும் பதவிக்கு உரிய கல்வித்தகுதியினை சந்தேகத்திற்கு இடமின்றி நிருபிக்கும் பொறுப்பு அவருக்கு மட்டுமே உண்டு என்பதை உணர வேண்டும். மேலும் கல்வித்தகுதி சார்ந்து மற்றும் இதர சிறப்பு ஒதுக்கீடுகள் சார்ந்து பணி நாடுநர்கள் அளிக்கின்ற விவரங்களின் / ஆவணங்களை நிரூபிக்கும் பொறுப்பு பணிநாடுநரையே சாறும் என்பது தெளிவுப்படுத்தப்படுகின்றது.

ii) இணையவழி விண்ணப்பம் அளிப்பதும் மற்றும் கணினி வழி தேர்வில் பங்கு கொள்வதும் ஆகிய காரணங்களுக்காக மட்டுமே ஒரு பணிநாடுநரின் தெரிவினை சார்ந்து உரிமை கோர இயலாது. இந்நிகழ்விற்கு பின் சான்றிதழ் சரிபார்ப்பின் மூலம் அவர் முழு தகுதி பெற்றுள்ளாரா என்பதும் சம்பந்தப்பட்ட இடஒதுக்கீட்டு பிரிவில் தெரிவு செய்ய போதுமான மதிப்பெண் பெற்றுள்ளாரா என்பது மட்டுமே தெரிவினை தீர்மானிக்கும்.

iii) Cut-off மதிப்பெண் இருந்தும் விண்ணப்பித்த பதவிக்கான உரிய கல்வித்தகுதிகள் இல்லை எனினும் நிராகரிக்கப்படுவர்.

**13. தேர்வினை இரத்து செய்தல் :-**

i) நிர்வாக காரணங்களுக்காகவோ, நோய் தொற்று மற்றும் பேரிடர் சார்ந்த காரணங்களுக்காகவோ ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்தும் தேர்வினை தள்ளி வைக்கவோ அல்லது இரத்து செய்யவோ ஆசிரியர் தேர்வு வாரியத்திற்கு முழு உரிமை உண்டு என்பதை பணி நாடுநர்களுக்கு தெரிவிக்கப்படுகின்றது.

ii) பணி நாடுநர்களின் ஒழுங்கின்மை :- தேர்வு மையங்களில் ஒழுங்கீன செயல்களில் ஈடுபடும் பணி நாடுநர்கள் மற்றும் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படுத்தும் விதமாக நடக்கும் பணி நாடுநர்கள் மீது கடுமையான குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படுவதோடு சார்ந்த பணி நாடுநர்கள் 5 முதல் 7 ஆண்டுகள் வரை ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்தும் எந்த வொரு தேர்வுகளிலும் கலந்துகொள்ள தடை விதிக்கப்படும் என்பதும் தெரிவித்துக்கொள்ளப்படுகின்றது. மேலும் ஆயுட்கால தடை விதிக்கவும் ஏதுவாகும் என்பதும் தெரிவிக்கப்படுகின்றது.